# பெண்ணிய நோக்கில் தோழி

# Penniyanokkil Thozhi

**ஜோ. சாந்தமூர்த்தி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**Joe. Shantamurthy**
*Ph.D. Research Scholar*
*Department of Tamil Studies*
*Annamalai University*

**ஆய்வுச் சுருக்கம்**

*பொதுவாக சங்க இலக்கியங்களின் வழி பெண்களின் நிலைப் பற்றியும் குறிப்பாக ஆணாதிக்கத்தில் இருந்து பெண்கள் எவ்வாறு தங்களை நிலைநிறுத்திக் கொண்டனர் என்பதை பற்றியும் அறியமுடிகிறது. உடல் சார்ந்த வருணனைகள் மிகுதியாக இடம்பெறுகிறது. ஆனால் இங்கு தோழியின் நிலைப்பாடு வேறானதாக அமைகிறது. குறிப்பாக மதியுணர்வு மிக்கவளாக தோழி அறியப்படுகிறாள். ஒன்றும் அறியாத பெண்ணாக தலைவி படைக்கப்பட்டாலும், தலைவியை வழிநடத்தும் மாண்பை தோழி பெறுகின்றாள். அதுமட்டும் அல்லாமல் தலைவன் தேன் போன்று இனியவளான தலைவியைப் பிரிந்து பரத்தையரை இழைந்தான். அப்படிப்பட்டவன் ஒருநாள் பாம்பினால் உண்டாகும் துன்பத்திலிருந்து எங்களைக் காத்தவன். அவன் எங்களைப் பிரிய வேண்டும் என்ற நினைத்தால் பிறந்த வீட்டிற்கு அழைத்துச் சென்று விடுவாயாக என்று தோழி கூறுகின்றாள். இவ்வாறு தோழியின் நிலைப்பாடானது சங்க இலக்கியத்தில் மிகுதியாக பேசப்படுகிறது.*

***முக்கியச் சொற்கள்:***

*பெண்ணியம், சங்க இலக்கியம், பரத்தையர், தோழி, தலைவி, களவுக்காதல், தொல்காப்பியம்*

**Abstract**

*Through Sangha literature in general we can learn about the status of women and in particular how women have established themselves from patriarchy. Physical commentary abounds. But here the position of the friend is different. Thozhi is known to be especially compassionate. Although the leader is created as a girl who knows nothing, the friend gets the honor of guiding the leader. Not only that, the leader separated from the honey-sweet leader and married a prostitute. Such a person will one day protect us from the suffering caused by the snake. The friend says that if he wants to separate us, take him to his birthplace. Thus the position of Thozhi is abundantly discussed in Sangha literature.*

***Keywords:***

*Feminism, Society Literature, Whore, Friend, Leader, Espionage, Tolkappiyam*

**Citation**

Shantamurthy, Joe. “Penniyanokkil Thozhi.” *Journal of Tamil Culture and Literature*, vol. 2, no. 1, 2022, pp. 18–26.

**முன்னுரை**

*பெண்ணிய நோக்கில் தோழி என்று குறிப்பிடும் பொது தோழியானவள் தலைவன் மற்றும தலைவியை ஒனறு சேரக்கும் உறவாக திகழ்கின்றாள். அகத்திணை மாந்தர்களில் தோழிக்கென்று தனிக்பெரும் சிறப்பும் உண்டு என்பதை நம்மால் உணரமுடிகிறது. தலைவன், தலைவி ஆகிய இருவரையும் சேர்த்தும், ? தனித்ததனியாகவும் கூற்றுகள் நிக்த்துபவளாகத் தோழி விளங்குகின்றாள். களவு, கற்பு என்னும் இருதிறப்பட்ட அக வாழ்க்கையிலும் தோழியின் பங்களிப்பு அதிகம் எனலாம். தலைவன் வரைவு நீட்டித்த இடத்து அவளை வரைவு கடாவுகின்றபோது தலைவியின் களவுக்காதல் வெளிப்பட்டு நிற்கும்போதும், அறத்தோடு நின்று முறைமைப்படுத்தும் போதும் உடன்போக்கிலும் தோழியின் செல்வாக்கு குறிப்பிடத்தக்கதாகும். கற்பில் தலைவி, தலைவனைப் பிரிந்து வாடுகின்ற போதும், அவளை ஆறுதல் கூறுகின்ற பொறுப்பு தோழிக்குரியது. தலைவன் தலைவிஆகிய இருவரது மனவோட்டங்களை நன்கறிந்து செயல்படும் மதிநுட்பம் நிறைந்தவளாகிய தோழிக் கூற்றுப்பாடல்களே சங்க அக இலக்கியத்தில் மிகவும் அதிகமாகக் காணப்படுகின்றன. அகத்திணை மாந்தர்களை இணைத்து நிற்கும் இணைப்புப் பாலமாகத் தோழி விளங்குகின்றாள்.*

**தொல்காப்பியத்தில் தோழி பற்றிய பதிவுகள்**

**தோழியின் திறன்**

***குறையுற உணர்தல் முன்னுற உணர்தல்***
***இருவரும் உள்வழி அவன்வர வுணர்தலென***
***மதியுடன் படுதல் ஒருமு வகைத்தே (தொல்.பாருள். நூ. 125)***

*தலைவன் குறையுற வுணர்தலும் அவன் குறையாவித் தலைவி குறிப்புக்கண்டு உணர்தலும் நானும் தலைவியுங் கூடியிருந்துழித் தலைவன் வந்தமைக் கண்டு உணர்தலும் என மூவகை இடத்தும் தோழி அறிவுடம்படுதல் நிகழ்கின்றது. மேலும்,*

***அன்ன வகையான் உணர்ந்தபின் அல்லது***
***பின்னலை முயற்சி பெறாள் என மொழிப (தொல்.பொருள். நூ. 126)***

*இதில் தலைவன் தலைவி இருவரின் அன்புடைமையை உணர்ந்தபி்ன் அல்லது வழிபாட்டு நிலைமையாற் கூட்டத்திற்கு முயலப்பெறுபவள் தோழி. மேலும், தோழி வழிமொழிந்து முயலுங்காலத்து அவன் நினைவின்கட் படுந்திறன் ஆராய்ந்து புணர்தலை செய்வாள் என்பதனை,*

***முயற்சிக் காலத் ததற்பட நாடிப்***
***புணர்ந்த லாற்றும் அவள்வயி னான (தொல்.பொரு. நூ. 127)***

*என்று தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.*

**கற்பில் தோழி கூற்ற நிகழும் இடம்**

***பெறற்கரும் பெரும்பொருள் முடிந்தபின் வந்த***
***தெறற்கரு மாயிற் சிறப்பின் கண்ணும்***
***அற்றமழி வரைப்பினும் அற்றம் இல்லாக்***
***..............................................................................................***
***தோழிக் குரிய என்மனார் புலவர்***

*இந்நூற்பாவில் பெறுதற்கு அரிய பெரும் பொருளை முடித்த பின்னர்த் தோன்றிய தெறுதற்கரிய மரபு காரணத்தால் தலைவனைச் சிறப்பித்துக் கூறுமிடத்து பிரியுங் காலத் தெதிர்நின்று சாற்றிய எதிரும் உளப்படி பிறவும் தோழிக்குரிய கூற்று நிகழும்இடங்கள் என்பதை அறியமுடிகிறது. மேலும்,*

***புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்துஞ்***
***சொலத்தரு கிளவி தோழிக் குரிய (தொல்.பொ. நூ. 155)***

*என்னும் நூற்பாவில் தோழிக்குரிய மரபுகதை தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். மேலும்,*

***பரத்தை மறுத்தல் வேண்டியுங் கிழவி***
***மடத்தரு கிழமை உடைமை யானும்***
***அன்பிலை கொடியை என்றலும் உரியன் (தொல்.பொ. நூ. 156)***

*என்று தோழிக்கு உரிய இல்புகளை இந்நூற்பாவில் கூறுகின்றார் தொல்காப்பியர்.*

**தோழியின் அறிவுரை**

***பரத்தமை தாங்கலோ விலனென வறிதுநீ***
***புலத்தல் ஒல்லுமோ மனைகெழு மடந்தை (அகம். பா. 16)***

*என்ற பாடல் வரிகளின் மூலம் தலைவனின் பரத்தமையை வெறுத்து அவரோடு ஊடல் கொள்ளும் பெண்கள், நம்மிடம் திருமகள் விலகிச் செல்லவும், நொய் அரிசியை முறத்தால் புடைத்துத் தாமே சமைத்து உண்டு தனிமையை மேற்கொண்டவராகவும், இனிய மொழி பேசும் குழந்தைகள் பால் இன்றி உலர்ந்த முலையைச் சுவைத்து பார்த்தும் பெரிதும் வருந்த இருப்பார்கள். ஆதலால் அதனைஅறிந்து பரத்தமை குறித்து மாறுபாடு கொள்ளாமல் இருப்பவரே அறிவுடையவர்கள். மற்றவர்கள் அறிவில்லாதவரே என்று தோழி அறிவுரைக் கூறுகின்றாள்.*

***தஞ்ச மருளாய் நீயேநின்***
***னெஞ்சம் பெற்ற விவளுமா ரழுமே (ஐங்குறு. பா. 50)***

*என்னும் பாடல் வழி தலைவிக்குச் செல்வம் போன்ற ஆயுத்தாரும் நாங்களும் வருந்துகின்றோம். உன்னைத் தன் நெஞ்சில் பெற்ற இவளும் அழுகின்றாள். எனவே நீ பரத்தமையை விலக்கி அருள் செய்வாயாக என்று தலைவனுக்கு அறிவுரை கூறுகின்றாள் தோழி. மேலும்,*

***கூதிர் ராயிற் றண்கவிழ் தந்து***
***வேனி லாயின் மணிதிறங் கொள்ளும்***
***யாறணிந் தன்றுநின் னூரே***
***பசப்பணித் தனவான் மகிழ்நவென் கண்ணே (ஐங். 45)***

*என்னும் பாடல் வரிகளில் தாழி தலைவனிடம் உன் ஊர் மழைப் பெய்யும் காலமாயினும் மயை ீல்லாக் கோடையாயினும் அணியுடன் திகழ்கின்றது. அதனால் உன்னை மணந்த தலைவி எப்பொதும் பசலையுடன் இருக்கின்றாள் என்ற அவனின் தீயொக்கத்தினைச் சுட்டி அறிவுரை கூறுகின்றாள் தோழி.*

**தோழியின் எள்ளல் தன்மை**

*தலைவனின் பரத்தமையால் தலைவி இன்னாதவள் ஆயினாள். இளமையுடைய தலை வேம்பின் காயினைத் தந்தாலும் தலைவனுக்கு கருப்புக்கட்டி போன்று இருந்தது. ஆனால் அவளுக்கு முதுமை அடைந்ததும், குளிர்ச்சியையுடைய சுனையில் உள்ள தெளிந்த நீரைத்*

*தந்தாலும் செம்மையாய் விளங்குகின்றது. தலைவனி' அன்பு இவ்வாறு காட்சியளிக்கின்றது என்று தோழி எள்ளி நகையாடுகின்றாள். அவை,*

***வேம்பின் பைங்காயென் தோழி தரினே***
***தேம்பூங் கட்டி யென்றனி சினியே***
***பாரி பறம்பிற் பனிச்சுனைத் தெண்ணீர்***
***தைஇத் திங்கட்டண்ணிய தரினும்***
***வெய்ய வுவர்க்கு மென்றனிர்***
***ஐய வற்றா லன்பின் பாலே (குறுந். 196)***

*என்னும் குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.*

**பரத்தமையை எள்ளும் விதம்**

***இவணலாம் புலம்பப் பரிய***
***வனைநல முடையளோ மகிழ்நநின் பெண்டே (ஐங். பா. 57)***

*என்னும் இப்பாடலில் தேனூர் நகரைப் போன்ற அழகுடைய தலைவியின் பெண்மை நலம் தனிமையால் கெட்டிடொழியுமாறு நீ பிரிவதற்குக் காரணமாக விளங்கிய உன்னால் விரும்பப்பட்ட பரத்தை அத்துனைப் பேரழகியோ என்று பரத்தயை இகழ்ந்துக் கூறுகின்றாள் தோழி.*

**தோழியின் ஆற்றாமை**

***இருபெரு வேந்தர் பொருகளத் தொழித்த***
***புன்னை விழுமம் போல***
***என்னோடு கழியுமிவ் இருவாது இகலே (நற். பா. 180)***

*என்னும் இப்பாடலில் தலைவன் தலைவியின் ஊடல் முடியவில்லை. அன்னி என்பவனம், தொழுந்தூரினுள்ள திதியன் என்பவனும் குறுக்கை என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் என்னியால் வெட்டிச் சாய்க்கப்பட்ட பூவும் மலரும் கொண்ட புன்னைமரம் சாய்ந்தது. அப்பொழுது வேந்தர் இருவரின் பகையும் முடிந்தது. தலைவனுக்கும் தலைவிக்கும் இடையிலுள்ள நான் இறந்துவிட்டாள் அவ்விருவரும் ஒன்று கூடுவர் என்று தன் ஆற்றாமையைக் கூறுகின்றாள் தோழி.*

**தன்னலம் பாரா தன்மை**

*தலைவியின் நிலையைத் தன் நிலையாக என்னும் தன்மை தோழியிடம் காணப்படுகின்றது. அது,*

***புதுவறங் கூர்ந்த செறுவில் தண்ணெனெ***
***மலிபுனல் பரத்தந் தா அங்கு***
***இனிதே தெய்யதின் காணுங் காலே (நற். பா. 230)***

*அதாவது புதிய நீர்பெருக்கு வறட்சியற்ற பகுதியில் வாழ்பவருக்கு மகி'ச்சி தருவது போல தலைவிகு தலைவனின் தோற்றம் பெரிதும் இன்பம் செய்யும் அவன் வரமாட்டான் என்று ஏங்கிய போது அவன் வந்ததே முயக்கத்தினும், சிறந்ததாக அமைந்தது என்ற தலைவியின் எண்ணத்தைத் தன்னுடையதாக நினைத்து ஏங்குகின்றாள் தோழி.*

*தலைவியின் நட்பு பிறவிதொறும் தொடர வேண்டும் என்றும் தலைவியின் பரத்தமைப் பண்பினால் தலைவியின் மீது இருந்த நட்பு நாளும் குறைவதைக் கண்டு அது மீண்டும் தொடர வேண்டும் என்று விரும்பியிருந்தேன் என்று கூறுகின்றாள் தோழி. இதனை,*

***தன்டுறை யூரன் கேண்மை***
***வழிவழிச் சிறக்க வெனவேட் டேமே (ஐங். பா. 2)***

*என்ற பாடலில் தலைவியின் வாழ்வே தன் வாழ்வு. ஆதலால் இவளை வரைவில் வரைந்து கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு வரும் போது எம் தந்தையும் மனம் மகிழ்ந்து பெண்தர வேண்டும் என்றும் விரும்பி இருந்தோம் என்று நினைக்கின்றாள் தோழி. இவ்வாறு தன்னலம் பாரா தன்மையைக் காண்டவளாக இருக்கின்றாள் தாழி.*

***மலர்ந்த பொய்கை மூகைந்த தாமரைத் (ஐங். 6)***

**பரத்தமையை இகம் தன்மை**

***யாணர் ஊரநின் மாணிழை மகளிரை***
***எம்மனைத தந்துநீ தழீஇயினும் அவர்தம்***
***புண்மனத்து உண்மையோ அரிதே அவரும்***
***பைந்தொடி மகளிரொடு சிறுவர்ப் புயந்து***
***நின்றி சான்ற கற்போடு***
***எம்பா டாதில் அதனினும் அரிதே (நற். பா. 330)***

*என்னும் இப்பாடல் தலைவன் குலமகளிரைப் போலப் பரத்தையைத் தவிக் கிடந்தாலும், நன்மையுடன் விளங்கும் கற்புப் பொருந்திய என்னுடைய மகளிரை ஒத்து அமைதல் இயலாத ஒன்று என்ற பரத்தமையை இகழ்கின்றாள் தோழி. மேலும்,*

***அத்தர மகளிர்க்குத் தெய்வமும் போன்றெ (ஐங். பா. 76)***

*என்னும் இப்பாடல் பைஞ்சாயக் கோரை போன்ற நீண்ட கூந்தலையும், பசிய மலர் போன்ற அழகிய தேமலையும், ஒள்ளிய வளையல்களையம் கொண்ட பரத்தை உன்னுடன் நீ ராடியதனால் அவள் வானுலகப் பெண்கட்குத் தய்வம் போன்ற சிறப்பு எய்தி விட்டாளோ என்று பரத்தமையை இகழ்கின்றாள் தோழி.*

**தோழியின் நகைப்பு**

*பழையன் மாறன் இறந்தது கண்டு கோதை மார்பன் மகிழ்ந்தான். அம்மகிழ்ச்சியைவிடத் தலைவன் நமது இல்லத்திற்கு வராமல் பரத்தையின் வீட்டிற்குச் சென்று விடுகின்றான். ஆதலால் பரத்தை மிகவும் மகிழ்ச்சி அடைகின்றாள். நாம் அதனை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. இப்படிச் செய்துவிட்டு நீ யாரையும் அறியவில்லை என்று கூறுவது எனக்கு நகைப்பை அளிக்கின்றது என்று கூறுகின்றாள் தோழி. இதனை,*

***கிள்ளி வளவன் நல்லமர் சாஅய்க்***
***கடும்பரிப் புரவியாடு களிறுபல வவ்வி***
***எதில் மன்னர் ஊர்கொளக்***
***கோதை மார்பன் உவகையிற் பெரிதே (அகம். பா. 346)***

*என்பதால் அறியமுடிகின்றது.*

**தோழியின் நாணம்**

***மையீர் ஓதி மடவோய் யானுநின்***
***செரியேன அயலி லாட்டியேன்***
***நுங்கை யாகுவென் நினக்கெனத் தன்கைத்***
***தொடுமணி மெல்விரல் தண்ணெனத் தைவர***
***நுதலும் கூந்தலும் நீவிப்***
***பகல்வந்து பெயர்ந்த வாணுதற் கண்டே (அகம். 386)***

*என்னும் இப்பாடலில் பாணன் என்பவன் மற்போர் புரிவதில் வல்லவன். ஆரியப் பொருநன் அவளை எதிர்த்துப் போரிட்டான். பொருநனின் முழவு போன்ற தோள்கள் உடையவன் பாணனின் கையகப்பட்டு இறந்து விடுகின்றான். இறந்து அவனது உடலைக் கண்டு போரில் வல்ல கணையன் நாணியது போன்று தோழியின் நாணும் பகற்பொழுதில் வந்த பரத்தையைக் கண்டு நாணமடைந்தேன் என்றும் கூறுகின்றாள் தோழி.*

**வரைவு கடாதல்**

*என்னும் பாடல் வழி பூக்களை மிகுதியாகக் கொண்ட மருத மரத்தில் குருகுகன் தம் இனம் சூழ, குழுமி இருக்கும் தண்ணிய துறையினை உடைய தலைவன், அவன் தன்னுடைய ஊருக்குக் கொண்டு சென்று மணந்து வாழ வேண்டும் என்றும் கூறுகின்றாள். தோழி ஊரில் உள்ளவருக்குத் தெரிந்தால், அலர் ஏற்படும் என்றும் ஆனால் விரைவில் தலைவியத் தன்னூர்க்குக் கொண்டு சென்று வரைந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தாள் தோழி.*

*தலைவியின் அன்னை அவளின் பசலைக்குக் காரணம் யாது என்று பூசை செய்கின்றார். ஆம்பல் மலரோடு கூடிய பசிய தழையைத் தலையிலே சொருகிக் கொண்டு, கதிரவன் காயாத காலைப் பொழுதில் உன்னோடு நகைத்துப் பேசி பிழை செய்தமையால் உண்டான தவறே காரணம் என்று கூறி அவளைத் திருமணம் செய்யும்படி கூறுகின்றாள் தோழி.*

***யுளைப்பூ மருதத்துக் கிளைக்குரு கிருக்குந்***
***தண்டுறை யூரன் றன்னூர்க்***
***கொண்டனன் செல்க வெனவேட்டேமே (ஐங். பா. 7)***

*என்று வரையறை செய்யப்பட்டுள்ளது.*

**தோழியின் கோபம்**

*என்னும் பாடலில் தலைவன் பரத்தையை திருமணம் செய்தான் என்று கூறுகின்றனர்.*

*அள்ளூர் என்னும் ஊரை ஒதத எனது ஒளி பொருந்திய வளையலை அணிந்துள்ளவன் நெகிழ்ந்து வீந்தாலும் வீழட்டும் நீ கருதிய இடத்திற்கு செல்வாயாக என்றும் உன்னை தடுப்பவர்கள் யாரும் இல்லை என்று கோபம் கொள்ளுகின்றாள் தோழி.*

***பிண்ட நெல்லின் அள்ளூ ரன்னஎன்***
***ஒண்தொடி நெகிழினும் நெகிழ்க***
***சென்றீ பெருமதின் தகைக்குநர் யாரோ (அகம். பா. 46)***

***மதியேர் ஒண்ணுதல் வயங்கிழை யொருத்தி***
***இகழ்ந்த சொல்லுஞ் சொல்லிச் சிவந்த***
***ஆயித் மழைக்கண் நோயுற நோக்கித்***
***தண்ணுறுங் கமழ்தார் பரீஇயினள் நும்மொடு***
***ஊடினள் சிறுதுளி செய்தெம்***
***மணன்மலி மறுகினி இறந்திசி னோரே (அகம். பா. 306)***

*என்னும் பாடலில், தலைவியின் ஊடலைத் தீர்க்க இயலாமல் தோழியிடம் வந்தான் தலைவன் பரத்தையருள் ஒருத்தி உன்னை இகழ்ந்து பேசினாள், மணம் கமழும் மாலையை அறுத்தெறிந்தான். இவையெல்லாம் நடந்த பிறகு நீ என்னிடம் வந்து என்னைப் புகழ்தலை விட்டுவிட்டு இந்த இடத்தைவிட்டுச் செலக் என்று கோபம் கொண்டு கூறுகின்றாள் தோழி.*

**முடிவுரை**

*தமிழில் பழமையான நூலாக விளங்கும் தொல்காப்பியத்தில் தோழியின் இலக்கணத்தையும் அவளின் இயல்புகளையும் இக்கட்டுரையில் கூறியுள்ளேன். தோழி தலைவனின் பரத்தமை பண்பினை எள்ளி நகையாடுவதும், பரத்தமையை எள்ளும் விதத்தையம் காணமுடிகின்றது. தலைவியின் நிலையைத் தன் நிலையாகக் கருதும் தன்னலம் பாரா தன்மையும் தோழியின் பண்பாக விளங்குகின்றது. தலைவனையும், தலைவியையும் தன்னால் சேர்க்க முடியவில்லையே என்று ஆற்றாமைப் பண்பும் தோழியிடம் காணப்படுகின்றது. தலைவன் பரத்தையிடம் சென்று விட்டு மீண்டும் வந்து தலைவியிடம் சேர நினைக்கும் போது வாயில் மறுக்கும் தன்மையையும், தலைவனிடம் தலைவியை விரைவில் வந்து திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று வரைவு கடாதல் நிலையும், தோழியின் பண்புநலனாக விளங்குகின்றதை நம்மால் அறியமுடிகிறது.*

**துணைநின்ற நூல்கள்**


1. *புலியூர் கேசிகன், தொல்காப்பியம் தெளிவுரை, சாரதா பதிப்பகம், சென்னை, நூ. 125, 126, 127, 155, 156.*
2. *கு.வெ. பாலசுப்பிரமணியம், அகநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு - 2011, 316, 346, 384, 46, 306.*
3. *கு.வெ. பாலசுப்பிரமணியம், ஐங்கறுநூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு - 2011, 50, 45, 57, 2, 75, 6.*
4. *கு.வெ. பாலசுப்பிரமணியம், குறுந்தொகை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு - 2011, 196.*
5. *கு.வெ. பாலசுப்பிரமணியம், நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு - 2011, 180, 230, 330.*


## References


1. Puliyur Desigan, Tolkappiyam Gallurai, Sarada Publishing House, Chennai, No. 125, 126, 127, 155, 156.
2. Balasubramaniam, K.V., Akananuru Moolamum Uraiyum, New Century Book House, Chennai, Edition – 2011, 316, 346, 384, 46, 306.
3. Balasubramaniam, K.V., Iyngurunuru, Moolamum Uraiyum, New Century Book House, Chennai, Edition – 2011, 50, 45, 57, 2, 75, 6.

4. Sq. Balasubramaniam, Kurundogai Source and Text, New Century Book House, Chennai, Edition – 2011, 196.
5. Sq. Balasubramaniam, Natrinai Moolamum Uraiyum, New Century Book House, Chennai, Edition – 2011, 180, 230, 330.